நிலைமை தொடர்ந்து நீடிக்கக் கூடாது என்று நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசி முடித்துவிடுங்கள். அவ்வளவுதான். நாளை (குறுக்கீடு) உட்காருங்கள், அறிவிப்பு. (குறுக்கீடு) முடித்துவிடுங்கள். நிறைவு செய்யுங்கள்.

திரு. ஏ.எஸ். கண்ணன்: கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகக் கருத்தினைக் கூற வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைக் கூறி முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கைமீது நாளை 21–1–2006 (குறுக்கீடு) ஒரு அறிவிப்பை மட்டும் சொல்லிவிடுகிறேன். 24–1–2006 அன்று முன்வரிசைத் தலைவர்கள் பேசலாம். நாளை கேள்வி நேரம் வேண்டாம். நாளை மறுநாள் புதன்கிழமை கேள்வி நேரத்தை வைத்துக்கொள்ளலாம். வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றவுடன் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

7. அரசினர் தீர்மானம்

விதி 32–ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை வினாக்கள்–விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ, 24–1–2006 செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2006 ஜனவரி 23] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 24–1–2006 அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24–1–2006) செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–34 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

41. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

42. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம்) முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

43. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர்) முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

44. 2004–2005 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவின் இருபத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

45. 2004–2005 ஆம் ஆண்டிற்கான மாநகர்ப் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)